த.ஜெயசீலன்

**<u>“பூச்சியம் பூச்சியமல்ல” பற்றி</u>**

ஈழத்தின் தலை சிறந்த மூத்த படைப்பாளர்களில் முதன்மையான ஒருவரான சாகித்திய இரத்னா தெணியான் அவர்களின் இலக்கிய வாழ்வியல் அனுபவங்களைப் பகிரும் “பூச்சியம் பூச்சியமல்ல” என்ற நூல் நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிடப்பட்ட வெளியீடாக 2013 ஆம் ஆண்டு வெளிவந்தது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை மல்லிகை இதழில் தொடர்ச்சியாக இவர் எழுதி வந்த கட்டுரைகளே இந்நூலுக்கான ஆரம்ப புள்ளி எனலாம்.

“எனது இலக்கிய அனுபவங்களைச் சொல்ல விளையும் போது வாழ்க்கை வரலாற்றை தவிர்த்து அதனை எழுத இயலாது” என்று கூறும் தெணியானின் வாழ்க்கை வரலாற்றில் நடந்த இன்னோரன்ன சுவாரஸ்யமான விடயங்கள், நிகழ்வுகள, சம்பவங்கள் சரியான கால திகதியிடலுடன் இத்தொடரில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இதற்கு 60 களிலிருந்து தினக்குறிப்பு எழுதிவரும் இவரது இயல்பும் அவை மீள்வாசிப்புக்கு உட்பட்டதன் விளைவும் இந்த பதிவு எமது வாசிப்பு அனுபவத்திற்கு கிடைக்கப்பெற காரணமாக அமைந்திருந்தது. அனுபவப் பதிவானது இவர் சார்ந்த மண்ணின் ஒவ்வொரு கால கட்டத்தின் கோலங்கள் நடத்தைகளையும் இயல்புகள் வழக்கங்களை எம் கண்முன் விரித்து பதித்துச் செல்கின்றது.

“அடிநிலைச் சமூகங்களில் இருந்து வந்திருப்பவர்களின் வாழ்க்கை வரலாறு அவர்கள் தோன்றிய சமூகத்தின் அவல நிலையைப் பற்றி அறிவதற்கு உதவும்” எனக் கூறும் தெணியான் தனது வாழ்க்கை அனுபவத்தின் ஊடாக தனது குடும்பம், சமூகம், தனிப்பட்ட வாழ்வு என்பன சந்தித்த நெருக்கடிகளையும் பேசிச் செல்கிறார்.

“பேனா பிடிக்க வேண்டும் என்ற எனது கருத்துக்கு முரணாக என்னால் எழுத முடியாது” என்று பிரகடனப்படுத்தும் தெணியான் தன் வாழ்க்கையை அதன் உண்மை மாறாமல் பதிவு செய்திருக்கும் அதே நேரம் தன்னை வஞ்சித்த அவமதித்த ஏமாற்றிய நபர்களின் பெயர்களை நேரடியாகச் சொல்லாமல் தவிர்த்து ஆனால் அச்சம்பவங்களைப் பதிந்து செல்வதன் மூலம் தன் நாகரீக பண்பு முதிர்ச்சியையும் காட்டியுள்ளார்.

சுமார் 23 பிரிவுகளாக அல்லது சருக்கங்களாக “பூச்சியம் பூச்சியம்அல்ல” நீண்டு செல்கிறது.அவருடைய வாழ்வின் வெவ்வேறு கால கட்ட அனுபவப் பதிவாக மட்டுமன்றி செழுமைமிக்க வரலாற்றுத் தகவல்களின் களஞ்சியமாகவும் அந்தந்த கால கட்ட சம்பவங்களின் ஊடாக அந்த அந்த கால சூழ்நிலைகளை படம்பிடித்து காட்டும் ஒரு இலக்கிய முயற்சியாகவும் இந்நூல் தன்னை நிலை நிறுத்துகிறது. அதே வேளை அந்தந்த கால கட்டத்தின் இயல்புகளையும் குணாம்சங்களையும் புட்டு புட்டு வைக்கும் பதிவுகளாகவும் மிகவும் இயல்பான ஆற்றொழுக்க நடையில் வாசிக்க ஆரம்பித்தால் மீள வைக்க முடியாத சுவாரஸ்யத்தோடு இத்தொடர் விரிகிறது. இது அவருடைய எழுத்தாற்றலையும் எழில் மிக்க எழுத்து நடையையும் அவரின் சொற்செட்டையும் நினைவுக் களஞ்சியத்தின் செழுமையையும் தேக்கமற்ற சிந்தனை ஓட்டத்தையும் நினைவில் அலையடிக்கும் தகவல்களை ஒரு கோர்வை ஒழுங்கில் இலக்கியத் தரத்தோடு வெளிப்படுத்தி செல்லும் இயல்பான ஆற்றலையும் ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் முத்தாய்ப்பாய் தான்

சொல்ல எண்ணிய சரடான விடயத்தை ஒன்றில் நெற்றிப்பொட்டில் அடிப்பது போல அல்லது வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல சொல்லிடும் நேர்த்தி என்பன அவரின் தேர்ந்த எழுத்தாற்றலுக்கு சாட்சியமாகும்.

கிராம, வட்டார, ஊர் வழக்குகளில் மிகச் சாதரணமாகப் புழங்கும் சொற்களையும் அவர் கையாளும் முறையினையும் அவற்றிற்கு உயிர் கொடுத்து அவற்றை சிறகடித்துப் பறக்க விடுவதையும் இந்நூல் முழுவதிலும் வாசித்து இரசிக்கலாம். சிறுகதை, நாவல், குறுநாவல் ஆகிய வடிவங்களில் துறை தோய்ந்த அவர் ஒரு புது முயற்சியாக இவ் பத்தி எழுத்து போன்ற எழுத்து வடிவை இதில் தேர்ந்தெடுத்து இருப்பது பாராட்டப்படுதலுக்குரியது.

சிறுவனாக, மாணவப் பருவத்தில், இளையவனாக, ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் பயிலும் காலத்தில், தொழில் தேடிச் சென்ற இடங்களில், ஒரு சமூகப் பிரஜையாக, குடும்ப வாழ்வில் ஈடுபட்ட வேளையில், பிள்ளைகளின் வளர்ச்சிக் காலத்தில், என ஒவ்வொரு தனது வாழ்வின் படி நிலைகளிலும் கால மாற்றங்களின் போதும் தான் சந்தித்த பிரச்சினைகளையும் சவால்களையும் தான்பட்ட அவமானங்களையும் கிடைத்த வெற்றிகளையும் மகிழ்ச்சிகளையும் அழகாக பதிவு செய்துள்ளார் தெணியான் அவர்கள்.

தான் ஒடுக்கப்பட்டவர்கின் பிரதி நிதி எனச் சொல்லிக் கொள்வதில் தெணியான் அவர்கள் என்றும் பின் நின்றதில்லை. சங்கோஜப்பட்டதில்லை. வெட்கப்பட்டதில்லை அதனடிப்படையில் தான்பட்ட அவமானங்கள், காயங்கள் வஞ்சிப்புகள் என்பவற்றை இத்தொடர் முழுவதும் அவர் தெளிவாக பதிவு செய்கிறார்.

என்னதான சமவுரிமை, ஜயநாயகம், சோசலிசம் பேசினாலும் ஒவ்வொருவரினதும் ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் மேலாண்மை எண்ணம் எந்தெந்த வேளையில் எந்தெந்த ரூபத்தில் வடிவத்தில் தன்னை வெளிப்படுத்தி தன்னை நிரூபிக்க ஏனையவர்களை எவ்வாறு மட்டம் தட்டிச் செல்லும் என்பதை அவ்வப்போது நடந்த உதாரண சம்பவங்களினூடாக சொல்லிச் செல்வது யதார்த்தமாகும். தமிழன் எங்கு பூந்தாலும் அங்கு சாதி வந்து பூந்துவிடும். தமிழ்ச்சைவன் எங்கு பூந்தாலும் அங்கும் சாதி எழுந்து தன்னைக் வெளிக்காட்ட ஆரம்பித்துவிடும் என்று கூறும் தெணியான் அவர்கள் இப்பண்பானது மதம் கடந்தும் கிறிஸ்தவர்களுக்கிடையிலும் புரையோடிக் கிடக்கின்றது என்பதனை ஹாட்லிக் கல்லூரியில் தான் அனுபவப்பட்ட சம்பவம் ஒன்றை கூறுவதன் மூலம் எள்ளலுடன் குத்திக் காட்டுகின்றார். மேலும் ஒரு நிகழ்வில் பண்டிதர் ஒருவருடன் ஏற்பட்ட தர்க்கத்தை தொடர்ந்து “எனக்கு அப்பொழுது ஒன்று திடமாகத் தெரியும் இந்தப்பண்டிதரால் எனது சிந்தனைகளைத் தடுத்து நிறுத்திவிட இயலாது என்பது தான் அது” என்று உறுதியாகக் கூறும் தெணியான் அவர்கள் ஒரு சுயம்பாக தன்னை தானே புடம் போட்டு வளர்த்தெடுத்ததை இவ்வரிகளூடாக நிரூபித்துச் செல்கிறார்.

தனது ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அனுபவங்கள் பின் ஆசிரிய நியமனங்களைப் பெற்று இலங்கையின் வெவ்வேறு இடங்களில் பணியாற்றிய அனுபவங்களை கலை, எழுத்து, இலக்கிய, நாடக முயற்சிகளில் ஈடுபட்ட விபரங்கள் ஈழத்தில் இவரின் சம கால பெரும் படைப்பாளிகள் அறிஞர்களான டானியல், ஜீவா, பேராசிரியர்.க.சிவத்தம்பி, ந.சுப்பிரமணிய ஐயர், இராஜ சிறீகாந்தன், மலையகப் படைப்பாளி கே.கணேஸ், ஆப்டீன்,

Dr.M.K.முருகானந்தன் உட்பட இன்னும் பலருடான தொடர்புகளையும் அவர்களால் தான் பெற்ற அனுபவங்களையும் சிறப்பாகச் சொல்லிச் செல்கின்றார்.

"ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக, அவர்களின் பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக இன்று வரை எழுதிக்கொண்டிருக்கும் இலங்கை எழுத்தாளன் நான். இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பெறுமதி அற்ற, மதிப்பற்ற பூச்சியங்களாகவே சாதிய சமூகத்தினால் நோக்கப்பட்டு, வந்திருக்கிறார்கள். இவர்களுள் ஒருவனாகிய எனது வாழ்வின் சுவடுகளையும் இலக்கிய அனுபவங்களையும் எடுத்துச்சொல்லி அவர்கள் பூச்சியங்களல்ல என்பதனை உணர்த்தி இருக்கின்றேன்." என்று இவர் நூலின் இறுதியில் கூறிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

பல்வேறு நூல்களை ஆக்கி, பல படைப்பிலக்கியங்களைப் படைத்து ஈழத்து இலக்கியப் பரப்பில் நீங்கா இடம் படித்துவிட்ட தெணியான் அவர்கள் "பூச்சியம் பூச்சியம்அல்ல" என்ற இந்த நூல் தனித்துவம் மிக்கது என்பதையும் அவரை ஆய்வு செய்வோர் இந்நூலை தவிர்த்து மேற் செல்ல முடியாது என்பதையும் உறுதியாக கூறிப் பணிகின்றேன்.